THE 5TH WORLD EVANGELISM RETREAT





Study



Baptism



Bible School



Ladies' Meeting

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2015-2017
Posted at Batlagundu Post office on 10th Nov 2015

Our Radio & TV Programs
Sri Lanka Radio SW 25,41 Meter
on Saturday 5.30P.M &Tamilan TV
on Monday 6.00 A.M &
Saturday 7.30 P.M

To

Cell : 94435 58041
Phone : 04543 263 278
E-Mail arjunanglory@gmail.com

If Undelivered Kindly Return to

Our Postal Address:
THE WORD OF CHRIST
POST BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan
from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 15 நவம்பர் 2015 கனி 12

## அப்பொல்லோ



## Apollos

THE WORD OF CHRIST

"கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக" - கொலோசெயர் 3:16



ஆசிரியர்
B. அர்ஜுனன்



# World Evangelism Gospel Media



**Arjunan in Tamil on Tamilan TV & Radio:**
TV:Every Monday 7.30-7.45 p.m and Every Saturday 7.30-7.45 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 25 and 45 meter band of Sri Lanka Radio.
*(TAMILNADU Contact Mobile: 9443558041)*

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradhana TV:**
Every Sunday 6.00 p.m and Saturday 8.00 a.m.
Every Wednesday 6.30 p.m and Thursday 2.30 p.m **on Rakshana TV:**
*(ANDRAPRADESH Contact Phone: 08842363722)*

**P.R.Swamy & Douglas in Tamil on Radio:**
Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 25 and 45 meter band of Sri Lanka Radio. *(KARNADAKA Contact Mobile: 09844 70763)*

**P.K.Varghese in Malayalam on TV:**
Every Saturday 6.00-6.30 a.m on Jai Hindi Channel.
*(KERALA Contact Mobile: 9447035465)*

**Philemon & Kingsley in Tamil on Tamilan TV and Puthuyugam TV:**
Every Sunday 6.45-7.00 a.m and Every Tuesday 6.15-6.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 9244214421)*

**Rajanayagam in Tamil on Tamilan TV:**
Every Monday 7.00-7.15 a.m and Thursday 9.30-10.00 .m and Saturday 7.15-7.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 98427 30382)*

**Sunny, Francis & Vinay David in Hindi on TV:**
Every Sunday and Tuesday 7.00-7.30 p.m on ShubhSandesh Channel.
*(NEW DELHI Contact Mobile: 09810896789)*


## THE WORD OF CHRIST
Monthly Magazine

**Editor**
**B.ARJUNAN**

**Associate Editor**
**K.R.K.Ravi Asir**


அநேகரைப்போல, நாங்கள் தேவவசனத்தைக் கலப்பாய்ப் பேசாமல், துப்புரவாகவும், தேவனால் அருளப்பட்டபிரகாரமாகவும், கிறிஸ்துவுக்குள் தேவசந்நிதியில் பேசுகிறோம் - 2கொரி.2:17

## தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் மாத இதழின் உள்ளே...


ஆசிரியருரை
ஜெ.சி.சோட்,
பெட்டி சோட் அவர்களின் செய்தி
ஜெர்ரிபேட்ஸ், பவுலா பேட்ஸ்
அவர்களின் செய்தி மற்றும்
வேதபாடம்,
வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி
மற்றும் பல...


"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




# வேத அறிவுப் போட்டி எண்: 183

## போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் 25-ம் தேதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியையும் எழுதி அனுப்பவும். விடை ஜனவரி மாத இதழில்!

1. எலிசா மரணமடைந்தானா?
2. மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவனா?
3. கர்த்தாவே, ராஜ்யமும் உம்முடையது; தேவரீர் எல்லாருக்கும் தலைவராய் உயர்ந்திருக்கிறீர் என்று கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினவன் யார்?
4. எப்படிப்பட்ட பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருக்கவேண்டும்?
5. கர்த்தருடைய வழிகளில் நடக்கும்படி எந்த ராஜாவுடைய இருதயம் உற்சாகம் கொண்டது?
6. தேவனுக்கு மகிமையும் துதியும் உண்டாகவேண்டுமானால் எவர் மூலமாக வருகிற நீதியின் கனிகளால் நிறைந்தவர்களாக வேண்டும்?
7. எந்த ராஜாவின் முதலாம் வருஷத்திலே எருசலேமின் தேவாலயம் அதின் ஸ்தானத்திலே திரும்பவும் கட்டப்படக்கடவது என்று எழுதப்பட்டது?
8. கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக; என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன் என்று சொன்ன அப்போஸ்தலன் யார்?
9. யாருடைய நாட்களில் சில யூதருடைய பிள்ளைகள் பேசின பாஷை பாதி அஸ்தோத் பாஷையாயிருந்தது?
10. இரவும் பகலும் நாங்கள் வேலைசெய்து, தேவனுடைய சுவிசேஷத்தை உங்களிடத்தில் பிரசங்கித்தோம் என்ற அப்போஸ்தலன் யார்?

**போட்டியாளர்கள் கவனிக்க...**

ஒவ்வொரு முறையும் விடை எழுதும்போது உங்களுடைய பதிவு எண் அதாவது Ref.No யை கண்டிப்பாக எழுதவும். நமது மாத இதழை 100 பேருக்கு அறிமுகம் செய்து முகவரிகளை சேகரித்து ஆங்கிலத்தில் தெளிவாக மாவட்டம் மற்றும் பின்கோடு உடன் அனுப்பி வைப்பவர்களுக்கு ஒரு முழு வேதாகமம் பரிசாக கொடுக்கப்படும்.

**இம் மாத 'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' நடத்தும் வேதபாட வகுப்புகளும் சுவிசேஷ கூட்டங்களும்**

நாள்: நவம்பர் 10 மற்றும் 11 தேதிகள்
நேரம்: காலை 10 மணிமுதல் மாலை 7.30 மணி வரை
கிறிஸ்துவின் சபையார் கூடுமிடம்
1/1170/1 அலங்கார தட்டு மேற்கு
தூத்துக்குடி -2
சகல தொடர்புக்கும்
சகோ: ரவி ஆசீர், இணை ஆசிரியர்
09789024655



## அப்பெல்லோ

- அலெக்சந்திரியா பட்டணத்தை சார்ந்தவன் - அப்.18:24
- இவன் ஒரு யூதன்
- வேதாகமத்தில் வல்லவன்
- அப்போஸ்தலனாகிய பவுல் இவனைச் சேர்த்துக்கொண்டு தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாக காண்பித்தான் - அப்.18:26
- இவன் கிறிஸ்தவனாக மாற்றப்பட்டான்
- விசுவாசிகளுக்கு உதவியாயிருந்தான்
- முதல் நூற்றாண்டில் முன்மாதிரி மனிதன்.



Apollos

சிறுவர் பகுதி

# தொற்காள்

*வேதபகுதி: அப்போஸ்தலர் 9:36-42*



சீஷர்களை குறித்து வேதாகமத்திலே அதிகமாக படிச்சிருப்பீங்க! இல்லையா, ஆனால் சீஷிகளைக் குறித்து படிச்சிருக்கமாட்டீங்க. ஆதலால் இன்றைக்கு யோப்பா பட்டணத்திலே வாழ்ந்த தொற்காள் என்ற தபீத்தாளைப்பற்றி உங்களுக்கு சொல்லப்போறேன். ஒரு சீஷன் எப்படி இருக்கவேண்டும்? குருவைப்போல இருக்கவேண்டும். இந்த சீஷிகூட அப்படித்தான் இருந்தாங்க. ஆண்டவர் போதனைப்படி நடக்க ஒரு நாளும் தவறமாட்டாங்க இயேசு என்ன சொன்னாரோ அப்படியே நடந்தாங்க. நல்லதே செய்வது, இல்லாதவர்களுக்கு கொடுத்து உதவுவது போன்ற அநேக தருமங்களை மிகுதியாக செய்து கொண்டு வந்தாங்க. ஒரு சமயம் அவங்க வியாதிப்பட்டு வியாதியிலிருந்து குணமாகாம செத்துப்போயிட்டாங்க. உடனே செத்தவங்களை என்ன செய்வாங்க, குளிப்பாட்டி வைப்பாங்க இல்லையா? அப்படியே இந்த தொற்காளையும் குளிப்பாட்டி மேல் வீட்ல கொண்டுபோய் வச்சாங்க. பின்பு பேதுருவைப் பார்த்த விதவைகளெல்லாரும் அழுது கொண்டு தொற்காள் தங்களுடனேகூட இருக்கும்போது செய்திருந்த அங்கிகளை கொண்டு வந்து காண்பித்தாங்க.

பேதுரு என்ன செய்தாரு தெரியுமா? எல்லோரையும் வெளியே போகச் சொல்லி முழங்காற்படியிட்டு ஜெபம் பண்ணி, பின்பு பிரேதத்தின் புறமாய்த்திரும்பி தபீத்தாளே, எழுந்திரு என்றார் அவ்வளவு தான் அவள் தன் கண்களை திறந்து எழுந்து உட்கார்ந்தாள். என்ன ஆச்சரியம் பார்த்தீர்களா!

இந்த தெற்காள் என்னும் தபீத்தாளைப்போல நாமும் தானதர்மம் பண்ணவேண்டும். அது மாத்திரமல்ல நற்கிரியைகளையும் செய்யவேண்டும். ஏனென்றால் “நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம். அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்” (எபே.2:10). நல்லது தம்பி, தங்கைகளே மீண்டும் அடுத்த இதழில் கர்த்தருக்குச் சித்தமானால் சந்திப்போம்.

மனப்பாட வசனம்:

“தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும்,தெளிந்த புத்தியினாலும், தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும், தங்களை அலங்கரிக்க வேண்டும்” – (1தீமோத்தேயு2:10)




# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 15 நவம்பர்-2015 கனி - 12


ஆசிரியருரை

## நல்ல கனிகொடுங்கள்

### Give Good Fruits



**க**னியில்லாத வாழ்க்கை கால் வாழ்க்கை என்றே சொல்லவேண்டும். ஒவ்வொருவரும் நல்ல கனிகளைக் கொடுக்கும்படியாக தேவனால் சிருஷ்டிக்கப்பட்டுள்ளோம். உலகத்தில் தேவனால் படைக்கப்பட்ட அனைத்தும் உலகம் உண்டானது முதல் நல்ல கனிகளைக்கொடுத்துக் கொண்டிருக்கிறது. அதைப்போல மனிதர்களாகிய நாமும் தேவனுக்கு ஏற்ற கனிகளை கொடுக்கவேண்டும். ஆண்டவர் இயேசு தம்முடைய ஜனங்களுக்குப் போதிக்கும்போது, ஒரு உவமையைச் சொன்னார் என்னவென்றால்; "ஒருவன் தன் திராட்சத்தோட்டத்தில் ஒரு அத்திமரத்தை நட்டிருந்தான்; அவன் வந்து அதிலே கனியைத் தேடினபோது ஒன்றும் காணவில்லை. அப்பொழுது அவன் தோட்டக்காரனை நோக்கி: இதோ, மூன்று வருஷமாய் இந்த அத்திமரத்திலே கனியைத் தேடிவருகிறேன்; ஒன்றையுங் காணவில்லை, இதை வெட்டிப்போடு, இது நிலத்தையும் ஏன் கெடுக்கிறது என்றான். அதற்கு அவன்: ஐயா, இது இந்த வருஷமும் இருக்கட்டும்; நான் இதைச் சுற்றிலும் கொத்தி எருப்போடுவேன், கனிகொடுத்தால் சரி, கொடாவிட்டால், இனிமேல் இதை வெட்டிப்போடலாம் என்று சொன்னான் என்றார்" (லூக்.13:6-9). இந்த உவமையிலே சொல்லப்பட்ட தோட்டக்காரன் தான் நடவு செய்திருந்த அத்திமரத்தில் கனியை தேடினான். ஆனால் ஒன்றும் அகப்படவில்லை. அவனுக்குத்தான் எவ்வளவு கவலையிருந்திருக்கும்.

நம்முடைய பிதாவாகிய தேவன் தாம் தெரிந்துகொண்ட ஜனங்களைக்குறித்து சொல்லும்போது; "நான் உன்னை முற்றிலும் நற்கனிதரும் உயர்குலத் திராட்சச்செடியாக நாட்டினேன்; நீ எனக்குக் காட்டுத் திராட்சச்செடியின் ஆகாத கொடிகளாய் மாறிப்போனது என்ன?" என்றார் (எரே.2:21). தேவன் தமக்கென்று ஒரு கூட்ட ஜனத்தை பிரித்தெடுத்து அவர்களை ஆசீர்வதித்துக் கொண்டுவந்தார். எனவே நான் உன்னை முற்றிலும் நற்கனிதரும் உயர்குலத் திராட்சச்செடியாக நாட்டினேன் நீ எனக்குக் காட்டுத் திராட்சச்செடியின் ஆகாத கொடிகளாய் மாறிப்போனதென்ன என்று அந்த ஜனங்களைப் பார்த்துக்கேட்டார். ஆம், அன்பான தேவஜனமே நீ தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாக இருப்பாயானால் உன்னைப் பார்த்து கர்த்தர் கேட்கும் கேள்வியாக இது இருக்கிறது. அவர் உன்னிடத்தில் கனிகளை எதிர்பார்க்கிறார்."தேவனாகிய கர்த்தர் கிழக்கே ஏதேன் என்னும் ஒரு தோட்டத்தை உண்டாக்கி, தாம் உருவாக்கின மனுஷனை

அதிலே வைத்தார்" (ஆதி.2:8). தேவனாகிய கர்த்தர் மனிதனை ஏதோன் தோட்டத்தில் உண்டாக்கினதின் நோக்கமே அவன் தனக்கேற்ற கனிகளைக் கொடுக்கும்படியாகத் தான். நாம் பார்த்த உவமையிலே திராட்சத்தோட்டத்தில் ஒரு அத்திமரத்தை அந்த தோட்டக்காரன் நடவு செய்திருந்தானே. அதைப்போல தேவனாகிய கர்த்தர் ஏதோன் தோட்டத்தில் மனிதனை அங்கே வைத்தார். எல்லாமரங்களும் கனிகளைக் கொடுப்பதைப்போல இவனும் கனிகளை கொடுக்கும்படியாக சிருஷ்டிக்கப்பட்டான். நீங்கள் நினைக்கலாம், நான் எந்தவிதமான கனிகொடுக்க முடியுமென்று, அன்பானவர்களே, கனிகளைக் கொடுக்கும் மரங்களையும் செடிகளையும் பராமரிக்கும் மனிதன் கனிகளைக் கொடுக்கமுடியாதா? அவன் தேவனுக்குப் பிரியமான கனிகளைக் கொடுக்கமுடியும். அவன் தனித்திருந்தல்ல கர்த்தரோடு இசைந்து கனிகொடுக்கமுடியும். இயேசு சொல்கிறார்; "நான் மெய்யான திராட்சச்செடி, என் பிதா திராட்சத்தோட்டக்காரர்" (யோவா.15:1). மேலும் "நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" என்கிறார் (யோவா.15:5). எப்படி திராட்சச்செடியில் நிலைத்திருக்கும் கொடிகள் கனிகளைக் கொடுக்கிறதோ, அதைபோல நீங்களும் நானும் ஆண்டவரில் நிலைத்திருந்தால் ஆவிக்குரிய கனிகளை கொடுக்கமுடியும். இன்றைக்கு சிலர் இயேசுவைப் பற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர் அவர்களில் இருக்கின்றாரா? என்பதுதான் கேள்விக்குரியாக இருக்கிறது. ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான் என்றார். அவனும் ஆண்டவரில் நிலைத்திருக்கவேண்டும். ஆண்டவரும் அவனில் நிலைத்திருக்கவேண்டும். அப்பொழுதுதான் மிகுந்த கனிகளைக் கொடுக்கமுடியும். ஒருவன் தேவனுக்கு ஏற்காத காரியங்களைச் செய்யும்போது அவனில் ஆண்டவர் நிலைத்திருப்பது எப்படி? திராட்சச்செடியில் பூச்சிபிடித்ததையும், காய்ந்து போனதையும், கனிகொடாததையும் களைந்துபோடுகிறதுபோல அவர் அப்படிப் பட்டவர்களைக் களைந்துபோடுகிறார். அதன் முடிவு சுட்டெரிக்கப்படுவதே என காண்கிறோம்.

அத்திமரத்தை நடவு செய்திருந்தவன். மூன்று வருடங்களாக அந்த மரத்தில் அத்திப்பழங்களைத் தேடிவந்தான் என இயேசு சொல்லுகிறார். அவன் எவ்வளவு வாஞ்சையோடு அதை தேடிவந்திருப்பான் என்பதை நீங்கள் சற்று சிந்தித்துப்பாருங்கள். ஒருவேளை அடுத்த வருடம் நம்முடைய அத்திமரம் அத்திபழங்களைக் கொடுக்கும் அப்பொழுது நாம் அத்திபழங்களை சாப்பிடலாம். நம்முடைய உறவினர்களுக்கு அத்தி அடைபண்ணி கொண்டுபோய் கொடுக்கலாம் என்றெல்லாம் கனவு கண்டு இருப்பான் அல்லவா! ஆனால் அந்த அத்திமரமோ மூன்றாண்டுகளாக பலன் கொடாதிருந்தது. அதுவரை அவன் அதை வெட்டிப்போட மனதில்லாதிருந்தான். ஆண்டவர் சொல்லும் 100 ஆடுகள் பற்றிய உவமையில் "உங்களில் ஒரு மனுஷன் நூறு ஆடுகளை உடையவனாயிருந்து, அவைகளில் ஒன்று காணாமற்போனால், தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் வனாந்தரத்திலே விட்டு, காணாமற்போன ஆட்டைக் கண்டுபிடிக்குமளவும் தேடித்திரியானோ? என்று சொல்லுகிறார் (லூக்.15:4). ஆம், அதைப்போல இந்த தோட்டக்காரன் அத்திமரத்தில் வருஷந்தோறும் கனியைத் தேடிவந்தான். ஆனால் கனிகளோ அகப்படவில்லை. ஒரு முறை ஆண்டவர் இயேசு ஊழியத்தை



6. இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினாலே இந்த பெரிய கூட்டத்தில் ஒரு பகுதியாக மாறக்கூடியவர்களாயிருக்கிறோம்.

முன்னேக்கிப்பாருங்கள் - அசைவில்லாத அந்த ராஜ்யத்தை (25-29).

1. தேவன் பரலோகத்திலிருந்து பேசுகிறார் நாம் அதை கவனித்திருப்பது நல்லது.

2. மோசே தங்களுக்கு பிரமாணத்தை வாசித்து உரைத்தபோது கவனியாதவர்கள் தண்டிக்கப்பட்டிருந்தார்களேயானால் இன்னும் எவ்வளவு அதிகமாய் நாம் தண்டிக்கப்படுவோம்.

3. நிலையற்ற உலகில் நாம் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம். தற்காலிகமான இந்த உலகம் ஒரு நாள் அழிந்துபோகும். அசைவில்லாத அந்த ராஜ்யத்தை நாம் எதிர் நோக்கியிருக்கிறோம்.

4. அவர் சங்கீதம் 102:25-26 உள்ள தாவீதின் தீர்க்க தரிசனத்தை அப்படியே சொல்கிறார்.

5. நாம் தேவனுக்கு பயத்தோடும் நடுக்கத்தோடும் சேவை செய்ய வேண்டும். அவர் எதுவும் செய்துவிடுவார் என்ற பயத்தோடல்ல. அவருடைய வார்த்தையைக் கேளாமல் விட்டுவிடக்கூடாது என்ற அந்த பயத்தில் சேவிக்க வேண்டும் (10;25).

6. நம் தேவன் பட்சிக்கிற அக்கினி இதே வார்த்தைகள் உபாகமம் 4:24-ல் காணப்படுகிறது.

**நிறைவாக**

1. நாம் நம்பிக்கையிழக்காமலிருப்பதற்கு இந்த வார்த்தைகள் மேலும் நமக்கு ஊக்கமளிக்கிறது.

2. நாம் விசுவாசத்தின் சக்தியோடு சகித்துக் கொள்ளலாம். நாம் சகிக்கவேண்டும்.

3. அதுவே எபிரெயர் நிருபத்தின் செய்திகள். ஒருபோதும் சோர்ந்து விசுவாசத்தை விட்டுவிடாதீர். எந்தக் காலத்திலும் ஒரு போதும் விட்டு விடாதீர்கள்.

**JOIN OUR WORLD EVANGELISM BIBLE SCHOOL RIGHT NOW**

Contact: 94435 58041

**கர்த்தருடைய திராட்சத்தோட்டத்தில் வேலை செய்ய சுவிசேஷகர்கள் (வாலிபர்கள்) தேவை. உணவும், உடையும், மற்றும் உறைவிடமும் கொடுக்கப்படும்.**

**<u>இயேசு சொல்கிறார்:</u>**

"ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்"

யோவான்12:26.தொடர்புக்கு :94435 58041

'ஒரே வழி' வேதபாடம்

**The Master Course**

படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக
ரூபாய் 50-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று
**Certificate** பெற்றுக்கொள்ளுங்கள்
வயது: 20 க்கு மேல்.

**Batlagundu Bible College**
**Post Box No. 5,**
**Batlagundu-624 202**
**S.INDIA**

**பின்னோக்கிப் பார்ப்பது - ஏசாவின் மோசமான மாதிரி (15-17).**

1. ஏசா ஒரு சாதாரண மனிதன் அப்படியென்றால் தேவனுக்கென்று வாழாமல் தனக்காக உலகத்துக்காக வாழும் ஒரு சாதாரண மனிதன்.

2. தன்னுடைய (பிறப்புரிமை) சேஷ்டபுத்திர பாகத்தை யாக்கோபுக்கு விற்றுப்போட்டான். பின்பு யாக்கோபிடம் அவன் மனதை மாற்றிக் கொள்ளச் சொன்னான். ஆனால் மிகவும் காலம் கடந்து விட்டது.

3. தீர்மானம் நிலைத்தது. செயல்கள் தீர்மானிக்கப்பட்டபின் அவைகள் எளிதாக மாற்றப்பட முடியாது.

4. சிலர் பொதுவான மனிதன் என்றால் பொல்லாத அசிங்கமான வார்த்தைகளை பேசுகிற ஒருவனென்று நினைக்கின்றனர். ஆனால் ஏசா தகப்பனை நேசித்த ஒரு இணக்க குணங்களுடைய நல்ல மனிதன். அவன் ஒரு நல்லவனாயிருக்கலாம். ஆனால் தேவ காரியங்களில் அவனுக்கு ஆர்வமில்லை. சாதாரண மனிதனென்றால் ஆவிக்குரிய அறிவு இல்லாத அதன் மதிப்பு தெரியாத மனிதன் என்று பொருள்.

5.பக்திமார்க்க சம்பந்தப்பட்டவைகளின் மதிப்பு இன்று அநேகருக்குத் தெரிவதில்லை. துன்பவேளையில் பக்தி மார்க்கம் நன்றாயிருக்கிறது. பிள்ளைகளுக்கு பெலவீனமானவர்களுக்கு மேலும் ஐக்கியம் கொள்ள நமக்கு சிலர் வேண்டும் என்று எண்ணுவோருக்கு பக்தி மார்க்கம் நல்லது.

6. தேவன் தமது நியாயத் தீர்ப்பைச் சொல்லுகிறார். அப்படிப்பட்டவர்கள் நாள் வரும் அப்போது நம் மனங்களை மாற்றிக் கொள்வது மிகவும் தாமதமாகிவிடும். நியாத்தீர்ப்பு மாற்றப்படக் கூடாதது.

**மேல் நோக்கி பாருங்கள் பரலோகத்தின் மகிமையை (18-24).**

1. சீனாய் மலை சீயோன் மலையுடன் ஒப்பிடப்படுகிறது. பிரமாணம் கொடுக்கப்பட்டது. சபையில் கிருபையின் ஆசீர்வாதங்களோடு ஒப்பிடப்படுகிறது.

2. நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்ட தருணம் மிகவும் புனிதமான ஒன்று மட்டுமல்ல அது மக்களிடையே மிகுந்த பயத்தைக் கொடுத்தது.

அவர்கள் மின்னலையும், புகையையும் கண்டார்கள். இடியோசையைக் கேட்டனர். பர்வதம் அசைவதை உணர்ந்தார்கள்.

மலையைச் சுற்றிலும் ஒரு எல்லையைக் குறித்தார்கள். ஒரு மிருகம் அந்த எல்லையைக் கடந்தால் கூட அது கொல்லப்படவேண்டுமென்றிருந்தது மோசே மட்டுமே கர்த்தரிடம் பேச வேண்டுமென்று சொல்லுகிற அளவுக்கு மிகவும் பயந்திருந்தார்கள். மோசேயும் கூட பயந்திருந்தார். பழைய பிரமாணத்தில் மோசேகூட பயந்திருந்தார் என்று குறிப்பிடப்படவில்லை. ஆனால் உபாகமம் 9:19-ல் அவர்கள் பொன்கன்றுக் குட்டியைச் செய்தபோது மோசே பயந்திருந்தார். கர்த்தர் உங்களை அழிக்கும்படி உங்கள்மேல் கொண்டிருந்த கோபத்திற்கும் உக்கிரத்திற்கும் பயந்திருந்தேன் (உபா.9:19).

3. ஆனால் இப்போதோ நாம் ஒரு பரமநகரத்தை நோக்கிப் பார்க்கிறோம். நம்முடைய பிரஜாஉரிமை பரலோகத்திலிருக்கிறது.

4. இந்த இடத்திற்கு வருவதற்கு நாம் பயப்படக் கூடாது. ஆனால் முழு நிச்சயத்தோடு நெருங்கிச் சேரவேண்டும் (10:19-22).

5. நாம் முதற்பேரானவர்களின் சங்கத்திலிருக்கிறோம் மதிப்பும் உயர்ந்த ஸ்தானத்தையும் குறிக்கும் வார்த்தை முதல் பேரானவர் என்பது.



முடித்துவிட்டு தம்முடைய சீஷர்களோடு வந்துகொண்டிருக்கும்போது; அவருக்குப் பசியுண்டாயிற்று "அப்பொழுது இலைகளுள்ள ஒரு அத்திமரத்தைத் தூரத்திலே கண்டு, அதில் ஏதாகிலும் அகப்படுமோ என்று பார்க்கவந்தார். அத்திப்பழக் காலமாயிராதபடியால், அவர் அதனிடத்தில் வந்தபோது அதில் இலைகளையல்லாமல் வேறொன்றையும் காணவில்லை. அப்பொழுது இயேசு அதைப் பார்த்து: இதுமுதல் ஒருக்காலும் ஒருவனும் உன்னிடத்தில் கனியைப் புசியாதிருக்கக்கடவன் என்றார்; அதை அவருடைய சீஷர்கள் கேட்டார்கள்" (மாற்.11:13,14). ஆண்டவர் அத்திமரத்தில் கனியைத் தேடியதைப்போல நம்முடைய வாழ்க்கையிலும் தேடுகிறார். நாம் எக்காலத்திலும் கனிகளைக் கொடுக்கும்படியாக அவர் விரும்புகிறார். அன்பு நேயரே, நீ கர்த்தருக்கு ஏற்றவிதத்தில் கனிகொடுப்பாயா, உன்னை கனிகொடுக்கும்படியாக அவர் சிருஷ்டித்திருக்கிறார். என்னால் கனிகொடுக்கமுடியவில்லையே என்று கலங்கிக்கொண்டிருக்கிறாயா? கவலைப்படாதே அவரில் நிலைத்திரு அப்பொழுது எக்காலத்திலும் கனிகொடுப்பாய்.

ஆண்டவர் தம்முடைய சீஷர்களை அவருடைய ஊழியத்திற்காக தெரிந்துகொண்டார் என்பதை நாம் அறிவோம். அவர்களோ இயேசுவைப் பிடித்தவுடன் சிதறிப்போனார்கள். அந்நாட்களில் பேதுரு மறுபடியும் தன்னுடைய மீன்பிடி வேலையை துவக்கினான். ஆனால் இயேசு அவர்களை அதிகமாக நேசித்தபடியால் மீண்டும் அவர்களை சந்தித்தார். அவர்களோ இரவெல்லாம் கடினப்பட்டு ஒன்றும் பிடிக்கவில்லை. "விடியற்காலமானபோது, இயேசு கரையிலே நின்றார்; அவரை இயேசு என்று சீஷர்கள் அறியாதிருந்தார்கள், இயேசு அவர்களை நோக்கி: பிள்ளைகளே, புசிக்கிறதற்கு ஏதாகிலும் உங்களிடத்தில் உண்டா என்றார். அதற்கு அவர்கள் ஒன்றுமில்லை என்றார்கள்" (யோவா.21:4,5). அவர்களிடத்தில் கர்த்தர் எதிர்பார்த்தார் ஆனால் அவர்களோ ஒன்றுமில்லை என்றார்கள். அற்புத கர்த்தர் அவர்களுக்கு ஒரு ஆலோசனை கொடுத்து வலது புறமாக வலையைப் போடுங்கள் என்றார் அந்தப்படியாக போட்டு அதிமான மீன்களைப் பிடித்தார்கள். பின்பு அவர்களை அழைத்துவந்து "அப்பத்தையும் மீனையும் எடுத்து, அவர்களுக்குக் கொடுத்தார்" (யோவா.21:13). பிள்ளைகளே புசிக்கிறதற்கு ஏதாகிலும் உண்டா என்று கேட்ட கர்த்தருக்கு அவர்களால் ஒன்றும் கொடுக்க முடியாமற்போனது. ஆனால் இரவெல்லாம் கடினப்பட்டு ஒன்றும் பிடிக்காத அவர்களுக்கு ஆண்டவர் சூடான அப்பத்தையும் மீனையும் கொடுத்து போஷித்தார். அன்பானவர்களே, நீங்களும் நானும் ஆண்டவர் எதிர்பார்க்கிற காரியங்களை செய்யவேண்டும். அவர் அற்புதமானவர். அவராலே கூடாதது ஒன்றுமில்லை என்பதை நாம் அறிவோம். அவர் விரும்புகிற கனிகளை கொடுக்க ஒவ்வொருநாளும் முயற்சியுங்கள். "எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக்கொள்ளும்வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று" என்கிறார் (லூக்.13:34). ஆதிமுதலாக தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகளைக் கொண்டு தம்முடைய ஜனங்களை வழிநடத்திக்கொண்டு வந்தார் என்பதை நாம் அறிவோம். தன்னிடத்தில் அனுப்பப்பட்ட அந்த தீர்க்கதரிசிகளுடைய வார்த்தைக்கு செவிகொடாமல் அவர்களை கல்லெறிந்து கொன்றுபோட்டார்கள். ஸ்தேவானும் அப்படியாக மரித்துப்போனான் என்று அறிவோம். இப்படி அநேகமுறை தம்முடைய

ஜனங்களை கூட்டிச்சேர்த்துக்கொண்டுவந்தார். அதைப்போல வலைகளைவிட்டு இயேசுவின் பின்னே வந்தவர்கள் அவரைவிட்டு மீன்பிடிக்கும்படி மறுபடியும் திரும்பினார்கள். அவர்களை மீண்டும் சந்தித்து தமது ஆடுகளை மேய்க்கும்படியாக சொன்னார்.

கடைசியாக அத்திமரத்தை நடவு செய்திருந்த அந்த தோட்டக்காரனின் முடிவைப் பார்ப்போம். அவன் தன் வேலைக்காரனை அழைத்து இதை வெட்டிப்போடு என்றான். இதைக்கேட்ட வேலைக்காரன் ஐயா, இது இந்த வருஷமும் இருக்கட்டும்; நான் இதைச் சுற்றிலும் கொத்தி, எருப்போடுவேன், கனிகொடுத்தால் சரி, கொடாவிட்டால் இனிமேல் இதை வெட்டிப்போடலாம் என்று சொன்னான். ஆம் அன்பானவர்களே, ஆண்டவர் இயேசு உங்களுக்காக பிதாவிடம் பரிந்துபேசுகிறவராயிருக்கிறார். ஒருவேளை நீங்கள் இதுவரை கனிகொடாத கிறிஸ்தவர்களாக வாழ்ந்திருப்பீர்களானால் இந்த வருடமாவது கனிகள் நிறைந்த வாழ்க்கை வாழ பிரயாசப்படுங்கள். என்னிடத்தில் ஒன்றுமில்லை நான் எப்படி கனிகொடுக்கிற கிறிஸ்தவனாக வாழ முடியும் என்று நினையாதிருங்கள். உங்களிடத்தில் இருக்கிறவைகளை கர்த்தர் ஆசீர்வதிக்க வல்லவராயிருக்கிறார். ஆண்டவர் ஐந்து அப்பத்தையும் அந்த இரண்டு மீன்களையும் ஆசீர்வதித்து கொடுக்கு முன் தம்முடைய சீஷர்களைப் பார்த்து; நீங்களே அவர்களுக்கு போஜனங் கொடுங்கள் என்றார். அவர்களோ "இங்கே எங்களிடத்தில் ஐந்து அப்பமும் இரண்டு மீன்களுமேயல்லாமல், வேறொன்றும் இல்லை என்றார்கள்" (மத்.14:17). அந்த ஐந்து அப்பத்தையும் இரண்டு மீன்களையும் ஆசீர்வதித்து கொடுத்தார் ஐயாயிரம்பேர் சாப்பிட்டு மீதியானதை பன்னிரண்டு கூடைநிறைய எடுத்தார்கள். இவ்வளவு பேருக்கு எங்கே போவது என்ற பேச்சுக்கே இடமில்லை. ஏனென்றால் அற்புத கர்த்தர் அவர்களோடு இருந்தார் அல்லவா? இன்று நம்மோடும் இருக்கிறார். ஆகையால் ஆண்டவரில் விசுவாசமுள்ளவர்களாக ஜெபத்துடனே எதையும் செய்ய ஆயத்தமுள்ளவர்களாயிருக்கவேண்டும். இதுவும் கனிகொடுக்கும் ஜீவியத்தில் ஒன்று. எலிசா தன்னிடத்தில் முறையிட்ட விதவையின் குடும்ப கடனை தீர்க்க உன்னிடத்தில் என்ன இருக்கிறது என்று கேட்கும்போது அந்த ஞானமான ஸ்திரீ "ஒரு குடம் எண்ணெய் அல்லாமல் உமது அடியாளுடைய வீட்டில் வேறொன்றும் இல்லை என்றாள்" (2இரா.4:2). அதை மற்ற குடங்களில் வார்க்கச் செய்து கடன் முழுவதையும் அடைக்கும்படி எலிசா ஒரு அற்புதத்தை செய்தான். அவளோ கனி கொடுக்கிறவளாயிருந்தாள். அதைப்போல கானானிய ஸ்திரீயை ஆண்டவர் பார்த்து உன் விசுவாசம் பெரிது என்றார்" (மத்.15:28). அவளும் கனியுள்ள அதாவது விசுவாசமிக்கவளாயிருந்தாள். இப்படியிருக்கும்போது; "நடுகிறவனாலும் ஒன்றுமில்லை, நீர்ப்பாய்ச்சுகிறவனாலும் ஒன்றுமில்லை, விளையச்செய்கிற தேவனாலே எல்லாமாகும்" என காண்கிறோம் (1கொ.3:7). நடுகிறவனும் நீர்ப்பாய்ச்சுகிறவனும் ஒன்றாயிருக்கிறார்கள்; அவனவன் தன்தன் வேலைக்குத் தக்கதாய்க் கூலியைப் பெறுவான். நீங்களோ உங்களுடைய வாழ்க்கையில் கனிகொடுக்கிறவர்களாயிருங்கள்.

**அந்தந்த மரம் அதனதன் கனியினால் அறியப்படுமா?**

ஆம், அந்தந்த மரம் அதனதன் கனியினால் அறியப்படும். "நல்ல மரமானது கெட்ட கனிகொடாது, கெட்ட மரமானது நல்ல கனிகொடாது. அந்தந்த மரம் அதனதன் கனியினால் அறியப்படும்; முட்செடிகளில் அத்திப்பழங்களைப் பறிக்கிறதுமில்லை, நெருஞ்சிச் செடியில் திராட்சப்பழங்களைப் பறிக்கிறதுமில்லை"



# பாடம் -15 விசுவாசத்தின் சகித்துக்கொள்ளும் சக்தி

Endurance of Faith (Hebrews12) *- Jerry Bates*




2. ஆனால் தந்தையர் தங்கள் சொந்தக் குழந்தைகளை மட்டுமே சிட்சிக்கின்றனர். பக்கத்து வீட்டுப் பிள்ளைகளையும் நாம் சீர்படுத்த விரும்பலாம். ஆனால் அது முடியாத ஒன்று. வாழ்க்கையில் நாம் படும் கஷ்டங்களே கடவுள் நம்மை நேசிக்க வில்லை என்பதற்கு நிரூபணம் என்று சாத்தான் சொல்லுவான். நடைமுறையில் தலைகீழ் தான் உண்மையாயிருக்கும் தேவன் நம்மை சிட்சிக்காவிட்டால், நாம் அவருடைய பிள்ளைகளில்லை என்று பொருள். அவருடைய சிட்சை நாம் அவருடைய பிள்ளைகள் என்பதற்கு நிரூபணம்.

3. நாம் தகுதியுள்ளவர்களென்று காணப்படும்படி சிட்சிக்கப்பட வேண்டியாதாயிருக்கிறது. ஆனால் நமது அறிவு ஒரு எல்லைக்குட்பட்டது. தவறுகள் நடக்கின்ற நியாயமான தீர்ப்பை விட ஆழ்ந்த மன விருப்பத்தின்படி நாம் நடத்தப்படுகிறோம். இதன் அர்த்தம் சில சமயம் சிட்சையும் குழந்தைகளின் நலனுக்காக அல்ல என்றாகிறது.

4. தேவனுடைய அறிவு எல்லைக்குட்பட்டதல்ல. ஆகவே தேவனுடைய எல்லா சிட்சையும் நம்முடைய ஆதாயத்துக்கே (நன்மைக்கே) ஆகவே தேவனுடைய அதிகாரத்துக்குக் கீழ்ப்படிவோம்.

**சிட்சிப்பதில் கிடைக்கும் ஆசீர்வாதமான பலன்கள்.**

1. இப்பொழுது சிட்சை இன்பமாக இல்லை. வேதனையாக உள்ளது. ஆனால் அது நீதியின் தனியாத சமாதானத்தைக் கொடுக்கிறது (11).

2. நாம் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக்கொள்கிறேன் (சங்.119:71).

3. அது உன்னைக் காட்டிலும் எனக்கே அதிகம் வலிக்கிறது என்று பெற்றோர் சொல்வதை நம்புகின்றனர். "உன்னைவிட எனக்கே இது அதிக வேதனையுண்டாக்கிறது என்று சொல்லும்போது சில பிள்ளைகள் நம்புகின்றனர்".

4. சிட்சையை யாருமே விரும்புவதில்லை. ஒழுங்கு படுத்துவதைவிட அவன் வழியிலே விட்டு விடுவதே பெற்றோர்களுக்கு எளியதாயிருக்கிறது. நம்மை சிட்சிப்பதை தேவன் விரும்புவதில்லை.

5. அதில் முக்கியமான விஷயம் என்னவென்றால் இதற்கு நாம் நேர்மறையாக பதிலளிக்கிறோம். நாம் அதை உதாசினப்படுத்தலாம் அல்லது அதைரியப்படலாம் இரண்டுமே தவறாகும். முடிவு நம்மையாயிருக்குமென்று தெரிந்து பயன்படுத்துவதற்கு பதில் தைரியமாகயிருக்கலாம்.

6. ஆகவே தொடர்ந்து செல்ல நமக்கு தைரியமிருக்கிறது (12-13). இந்த மக்கள் இன்னும் செயல்படாமலிருக்கிறார்கள். அவர்கள் வளர்ச்சியடையவில்லை (5-6 அதிகாரங்கள்) அவர்கள் செயலிழந்தவர்களைப் போல செயல்படுகிறார்கள் (தளர்ந்த முழங்கால்கள்). தேவனுடைய கிருபையை இழந்து போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் (12:14-29). தேவகிருபை ஒருபோதும் தோற்காது. ஆனால் நாம் தேவ கிருபையை சார்ந்திருக்கத் தவறிவிடுகிறோம். மூன்று திசைகளிலும் விசுவாசத்தின் மூலமாய் நோக்கக் கடவோம்.



## ராகாப் - RAHAB

-Paula Bates

**யோசு.-அதி.2; 6:21-25; எபி.11:31; யாக்.2:25**

எபிரெயர்11ல் பட்டியலிடப்பட்டுள்ள பழைய ஏற்பாட்டு கதாபாத்திரங்களில் ஒருவள் ராகாப். அவளுடைய விசுவாசம் மற்றும் தைரியத்தினிமித்தம் அவள் அங்கே பட்டியலிடப்பட்டுள்ளாள்.

எபி.11:1 நீங்கள் ஒருவேளை மனப்பாடமாக அறிந்திருப்பீர்கள். "விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது" நம்பப்படுகிற சாராமிசம் (gist)- substance என்பது உறுதி எனப்பொருள்படவும் நிச்சயம் (evidence) என்பது திடநம்பிக்கை எனவும் பொருள்படக்கூடும். நினைவில் கொள்ளுங்கள் விசுவாசம் காணப்படாதவைகளை நம்புகிறது.

எபி.11:30 அவர்கள் எரிகோ பட்டணத்தை 7 முறை சுற்றி வந்த பின் எரிகோவின் சுற்றுச்சுவர்கள் இடிந்து விழுந்தன. யார் விசுவாசித்தனர்?

யோசு.6 எரிகோ பட்டணம் விழுந்தது... ஏழாம் நாளில் ஜனங்கள் ஆர்ப்பரித்தார்கள், சுவர் இடிந்து விழுந்தது, அவர்கள் உள்ளே சென்று பட்டணத்தைப் பிடித்துக்கொண்டார்கள்.

எபி.11:31 விசுவாசித்தினால், ராகாப் என்னும் வேசி கீழ்ப்படியாதவர் களோடு அழிந்துபோகவில்லை (கீழ்ப்படியாதவர்கள்), சமாதானத்தோடு வேவுக்காரர்களை ஏற்றுக்கொண்டபோது அவள் அழிந்து போகவில்லை.பெரிய பழையஏற்பாட்டில் விசுவாசமிகுந்த ஜனங்கள் மத்தியில் இரண்டு ஸ்திரீகளின் நாமங்கள் மட்டுமே பட்டியலிடப்பட்டுள்ளது. சாராள் என்பவள் இன்னொரு ஸ்திரீ... யூதர்களால் ஜாதிகளின் தாய் என்று மதிக்கப்பட்டவளாய் அவள் இருந்திருக்கிறாள்.

யோசு.1: மோசே மரித்த பின் தேவன் யோசுவாவோடு கூட இஸ்ரவேல் ஜனங்கள் ஜெயிக்க கால்மிதிக்கும் தேசத்தையெல்லாம் அவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கும்படி அவனோடுகூட இருக்கப்போவதாகப் பேசினார்.

யோசு.1:5 நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை

யோசு.1:6 பலங்கொண்டு திடமனதாயிரு. வசனம் 8 தேவனுடைய நியாயப்பிரமாணத்தை இரவும் பகலும் தியானித்துக் கொண்டிருப்பாயாக; அப்பொழுது உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்து கொள்வாய். வசனம் 9 பயப்படாதிரு.. . உன் தேவனாகிய கர்த்தர் நீ போகுமிடமெல்லாம் உன்னோடு இருப்பேன்.

நினைவுகூருங்கள்: இந்த ஜனங்கள் 40 ஆண்டுகள் வீடு இல்லாதவர்களாக எகிப்தில் அடிமைகளாக 400 ஆண்டுகளுக்கு மேலாக இருந்தவர்கள்.

தேவன் நம்மோடிருக்கிறார் என்று நாம் விசுவாசிக்கிறோமா?

நம் தேவன் உங்களோடிருக்கிறார் என்று சொல்கிறோம் ஆனால் இதை நாம் உண்மையாகவே விசுவாசிக்கிறோமா?

சங்.23; 27:1 யாருக்குப் பயப்படுவேன்? யாருக்கு அஞ்சுவேன்?

**- தொடரும்**



என்று இயேசு சொல்கிறார் (லூக்.6:43,44). அந்தந்த மரம் அதனதன் கனியினால் அறியப்படுவதுபோல, நாம் கர்த்தருடையவர்களை அவர்களுடைய கனிகளினாலே அறிந்துகொள்ளலாம். கர்த்தருடையவன் கர்த்தருக்கேற்ற கனிகளைக் கொடுப்பான். பொல்லாங்கனால் உண்டானவன் தீமைகளை கொப்பளிப்பான். அவரவருடைய கனிகளினாலே அறியலாம். நீங்கள் கர்த்தருடையவர்களாயிருந்து கணக்கில்லா கனிகளைக் கொடுத்து ஆசீர்வதிக்கப்படுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்

### வேத அறிவுப்போட்டி எண் 180 ல் வெற்றிபெற்றவர்கள்

| | |
|---|---|
| S.தங்கம் | - கன்னியாகுமரி |
| K.மோகன் | - குமாரபாளையம் |
| S.R.பெரியசாமி | - சேலூர் |
| A.டேவிட் ஜெயச்சந்திரன் | - மதுரை |
| B.ஸ்டெல்லாம்மா | - கூத்தூர் |
| Dr.J.பேசில் தேவசகாயம் | - மதுரை |
| Mrs.ருக்மணிஜெயசீலன் | - தேனி |
| R.கஸ்தூரி | - ஒட்டநத்தம் |
| M.ராமச்சந்திரன் | - ஒட்டநத்தம் |
| A.ரெபேக்காள் | - மதுரை |
| Tmt.மரகதம் திரவியம் | - கோம்பை |
| T.ராஜாத்தி | - கோம்பை |
| Mrs.ராஜம்மாள் | - திருப்பூர் |
| Sis.அல்லிராணிகாட்வின் | - சென்னை |

### வேத அறிவுப்போட்டி எண் 180 ன் விடைகள்

| | |
|---|---|
| 1.பாவமனுஷன் | - 2தெச.2:4 |
| 2.அவரைத் தேடுங்கள், நீதியைத் தேடுங்கள் மனத்தாழ்மையைத் தேடுங்கள் | - செப்.2:3 |
| 3.தேவபக்திக்கேதுவாக | - 1தீமோ.4:7 |
| 4.ஆகாப் | - ஆகா.2:10 |
| 5.மோசேக்கு | - 2தீமோ.3:8 |
| 6.தரியு | - சகரி.7:12 |
| 7.ஆம் | - தீத்.1;1 |
| 8.மல்கியா | - மல்.2:17 |
| 9.பிலேமோனுக்கு | - பிலே.22 |
| 10.யோசேப்பு | - ஆதி.45:14 |

தேசத்திலுள்ள எல்லாச்
சிறுமையானவர்களே
கர்த்தருடைய நியாயத்தை
நடப்பிக்கிறவர்களே,
அவரைத் தேடுங்கள்; நீதியைத் தேடுங்கள்,
அப்பொழுது ஒருவேளை கர்த்தருடைய
கோபத்தின் நாளிலே மறைக்கப்படுவீர்கள்
செப்பனியா 2:3

### வேத அறிவுப்போட்டி எண் 181 ல் வெற்றிபெற்றவர்கள்

| | |
|---|---|
| Sis.தேவி ராஜசிங் | - திருப்பூர் |
| S.லதாசூரியமூர்த்தி | - தேனி |
| Mrs.சாந்தா பழநி | - தர்மபுரி |
| A.டேவிட் ஜெயச்சந்திரன் | - மதுரை |
| Tmt.மரகதம் திரவியம் | - கோம்பை |
| T.ராஜாத்தி | - கோம்பை |
| R.கஸ்தூரி | - ஒட்டநத்தம் |
| M.ராமச்சந்திரன் | - ஒட்டநத்தம் |
| A.ரெபேக்காள் | - மதுரை |
| K.மோகன் | - குமாரபாளையம் |
| Mrs.லிங்காஜீவரத்னம் | - சிவகாசி |
| Mrs.ராஜம்மாள் | - திருப்பூர் |
| S.தங்கம் | - கன்னியாகுமரி |
| D.சாந்தாதேவி | - தேனி |
| N.விஜயநாதன் | - நாமக்கல் |
| S.R.பெரியசாமி | - சேலூர் |
| S.A.சாமுவேல் | - நாமக்கல் |
| V.வீரராகவன் | - கரூர் |
| J.ஆஷா ஹெலன் | - தூத்துக்குடி |
| B.ஸ்டெல்லாம்மா | - கூத்தூர் |
| T.ஏஞ்சலின் நேசமலர் | - மதுரை |
| Mrs.T.ஃபுளோரா எழில் | - ஆம்பூர் |
| R.சிவா | - காசிபட்டி |


### வேத அறிவுப்போட்டி எண் 181 ன் விடைகள்

| | |
|---|---|
| 1.மோசேயின் மாமன் | - யாத்.18:17 |
| 2.மோசே | - எபி.3:2 |
| 3.அருவருப்பானது | - லேவி.18:22 |
| 4.வீணான மனுஷனே | - யாக்.2:20 |
| 5.மோசே | - எண்.16:22 |
| 6.இயேசுகிறிஸ்து | - 1பேது.1:20 |
| 7.இஸ்ரவேலுக்கு | - உபா.11:21 |
| 8.கிருபையும், சமாதானமும் | - 2பேது.1:2 |
| 9.யோசுவா | - யோசு.23:10 |
| 10.யோவான் | - 1யோவா.2:21 |

**வேத அறிவு உங்கள் ஜீவியத்தை ஜீவழிக்கு மாற்றும்**

# நீங்கள் ஏன் பிரசங்கித்துக்கொண்டிருக்கிறீர்?
## Why are you Preaching?

J.C.Choate



உங்களால் கற்பனைபண்ணக்கூடிய ஒவ்வொன்றையும் உங்களால் கற்பனை பண்ணக்கூடாத பலகாரியங்களைக் குறித்தும் பிரசங்கிக்கின்ற அநேக பிரசங்கியார்கள் உலகத்தில் இருக்கின்றனர். நீங்களும் அவர்களில் ஒருவராக இருக்கலாம். அப்படியானால், நீங்கள் ஏன் பிரசங்கித்துக் கொண்டிருக்கிறீர்கள்?

சிலர் பணத்திற்காக மட்டுமே பிரசங்கிக்கிறார்கள் அல்லது ஜீவனத்திற்காக பிரசங்கிக்கிறார்கள் அவர்கள் எந்த சபையோடு ஐக்கியமாயிருக்கிறார்கள் என்பது குறித்து அவர்களுக்குக் கவலையில்லை, வேறு ஏதோ ஒரு சபை அதிக பணம் கொடுக்குமானால் அவர்கள் எளிதாக "நிலைமாறி" எதையெல்லாம் பிரசங்கிக்கக் கேட்டுக்கொள்ளபடுகிறார்களோ அதை பிரசங்கிக்க விருப்பம் கொள்ளுகின்றனர்.

மேலும், ஒரு குறிப்பிட்ட சமயக் குழுவோடு வளருகின்றவர்கள் அதோடு நிலைத்திருக்கும்படி விசுவாசமிக்க உணர்வுள்ளவர்களாகவும், அதற்காகப் பிரசங்கிக்கிறவர்களாகவும் கூட இருக்கின்றனர். அவர்கள் தங்கள் சபையைப் பற்றி வேதாகமத்தில் வாசிக்கமுடியவில்லை என்பது உண்மையாகயிருந்தாலும் அவர்கள் அதில் இணைந்து பிரசங்கம் செய்கின்றனர், அது மனிதனால் ஸ்தாபிக்கப்பட்டது, அது சமய சீர்திருத்த இயக்கம் உருவான நாட்களில் அல்லது மிக சமீபத்தில், மனித நாமங்களை தரித்திருக்கின்ற இவைகள் ஐரோப்பா, அல்லது அமெரிக்கா அல்லது இந்தியாவில் கூட இதனுடைய துவக்கத்தினைக் கொண்டிருந்தது, இரட்சிப்பிற்காகவும் அங்கத்தினரின் உரிமைக்காகவுமான இதனுடைய அறிவுரைகள் புதிய ஏற்பாட்டிலிருந்து வேறுபடுகிறது, இதனுடைய ஆராதனை முறைமைகள் புதிய ஏற்பாட்டு முறைமையிலிருந்து கூட்டி, குறைக்கிறதுமான இரண்டையும் செய்கிறது, மேலும் இதனுடைய கோட்பாடுகளில் அதிகமானவைகள் தேவனுடைய வார்த்தையில் இருக்கின்றவைகளுக்கு மாறாக மனிதனால் எழுதப்பட்ட கோட்பாடுகளில் அதிகாரம் செலுத்துபவரை சார்ந்தே உள்ளன. சில மனிதர்கள் பாரம்பரியங்களினால் மட்டும் இயங்கும் இப்பேர்பட்ட சபைகளோடு அல்லது தங்களுடைய தவறுகளின் அறியாமையினால் கட்டப்பட்டுள்ளனர்.

மற்றவர்கள் சில சமய குழுவுக்கு மாற்றப்பட்டிருப்பதினால் பிரசங்கம் பண்ணுகிறார்கள் மேலும் அவர்கள் உண்மையாக அவற்றில் விசுவாசம் வைத்து அதனுடைய போதனையையும் பணியையும் பரப்புவதில் உதவ விரும்புகின்றார்கள். அதிகமான நேரங்களில், மனித நேயம் என்ற பெயரில் சமூக சேவை செய்வதே பாவத்திலிருந்து விடுதலை அல்லது சமயக் கோட்பாட்டினை விட அதிக முக்கியத்துவப்படுத்தப்படுகிறது.

சிலர், தாங்கள் கிறிஸ்துவை தங்களுடைய இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் போது பற்பல பாஷைகளில் பேசவும் அற்புதங்களை செய்யவும் வல்லமையுடையவர்களாயிருக்க பரிசுத்த ஆவியின் வல்லமை தங்களுக்குக்



"பூரண அன்பு பயத்தைப்புறம்பே தள்ளும்" (1யோவா.4:18). அன்பு என்பது எது? நாம் அவருடைய கற்பனைகளின்படி நடப்பதே அன்பு (1யோவா5:3). ஆம், அன்பு சகோதரிகளே அவரது கற்பனைகளின்படி நடப்போமானால் நிச்சயம் கவலைகள் நம்மை மேற்கொள்ளாது.

இயேசுவினிடத்தில் அன்பு கூருகிறேன் என வாயில் கூறுவது அன்பல்ல. யோவா.14:23-ல் "ஒருவன் என்னில் அன்பாயிருந்தால் அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான்" என இயேசு கூறுகிறார். கிரியையில்லாமல் நாம் அவரிடத்தில் அன்பு கூருகிறோம் எனச் சொல்வோமானால் நம்மை நாமே ஏமாற்றுகிறவர் களாயிருப்போம். அவரிடத்தில் அன்பு கூருவோமேயானால் நிச்சயம் அவரை விட்டு எடுபடாது அவரோடு கூட நெருங்கிய ஐக்கியமுள்ளவர் களாயிருப்போம்.

இந்த மார்த்தாள் இவ்விதமாய் இருக்கும்போது பாருங்கள், இவளது சகோதரி மரியாளோ; "....இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து அவருடைய வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்தாள்" (லூக்.10:39). எனவே இயேசு அவளைக் குறித்து தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டுடெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள் என்றார் (லூக்.10:42). ஆம், இவள் தெரிந்து கொண்ட இந்த நல்ல பங்காகிய இயேசுவின் பாதத்தில் அவரது வசனத்தைக் கேட்டு அதன்படி செய்வோமானால் நாம் அவரில் அன்பாய் இருக்கிறோம் என்பதை நிரூபிக்கிறவர் களாயிருப்போம். பிலி.4:6,7-ல் சொல்லப்பட்டுள்ளபடி நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது எல்லாப்புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும். "கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்" (பிலி.4:5).

உண்மையாய் இயேசு கிறிஸ்துவை நம் இருதயமாகிய வீட்டிற்குள் ஏற்றுக் கொண்டு, அவரது பாதத்தில் உட்கார்ந்து நம் விண்ணப்பங்களை அவர் மூலம் தேவனுக்கு தெரியப்படுத்தி, வசனத்தைக் கேட்டு, அதன்படி நடப்போமானால் உலகத்தின் கவலையை ஜெயிக்கிறவர்களாயிருப்போம். தேவன் தாமே உதவி செய்வாராக!

ஜெபியுங்கள்

### 1தீமோத்தேயு 2:1-3



- குமுளியில் நடைபெற்ற கூட்டம் தேவனுடைய கிருபையால் ஆசீர்வாதமாக நடைபெற்றதற்காக தேவனுக்கு நன்றி சொல்லி...
- வேதாகம கல்லூரிக்காக...
- தொலைக்காட்சி, வானொலி மற்றும் மாத இதழ் ஊழியங்களுக்காக...
- கிறிஸ்துவின் சுவிசேஷ சத்தியத்திற்கு கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்ற ஏழுபேருக்காக...
- சபை ஊழியங்களுக்காக...

# ஒன்றுக்கும் கவலைப்படாதிருங்கள்

# Be Careful for Nothing

*J.Glory Arjunan*

பெண்கள் பகுதி



அநேகக் காரியங்களைக் குறித்து கவலைப்பட்டு, கலங்கிக் கொண்டிருக்கிற அன்பான சகோதரிகளே, இதோ ஆறுதலின் தேவன் நம்மை ஒன்றுக்கும் கவலைப்படாதிருங்கள் என அன்பாய் ஆவியானவர் மூலம் திருவுளம் பற்றுகிறார். இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராயிருக்கிறார். கிறிஸ்துவின் வசனம் ஜீவனுள்ளதாயிருக்கிறது இன்றும் நம்மைத் தேற்றுகிறது.

அநேகக் காரியங்களைக் குறித்து மார்த்தாள் என்ற சகோதரி கவலைப்பட்டு கலங்கிக் கொண்டிருந்தாள். இவ்விதமாய் சஞ்சலப்படுவதற்கு இவள் இயேசுவுக்குத் தூரமானவளுமல்ல. இயேசுவை தன் வீட்டிலே ஏற்றுக்கொண்ட ஸ்திரீ. ஆனால் ஒரே முறுமுறுப்பு இவளுக்கு. "இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக; மார்த்தாளே, மார்த்தாளே, நீ அநேக காரிங்களைக் குறித்துக் கவலைப்பட்டு கலங்குகிறாய் என்றார்" (லூக்.10:41).

ஆம், சகோதரிகளே, நாமும் கூட இவ்விதமாக கவலைப்பட்டு கலங்குகிறவர்களாய் தான் இருக்கிறோம். ஆனால் நாம் இயேசுவை விசுவாசித்து, அநேகருக்கு முன்பாக அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பண்ணப்பட்டு அவரை நம் இருதயமாகிய வீட்டிற்குள் ஏற்றுக் கொண்டவர்கள் தான்! இருப்பினும் அஞ்ஞானிகளைப் போல (தேவனை அறியாதவர்களை) உலகக் காரியங்களைக் குறித்து கவலைப்படுகிறவர்களாகவேயிருக்கிறோம். இது தேவனுக்குப் பிரியமாயிருக்குமா என சற்று சிந்திப்போம்.

இப்பேர்பட்டவர்களை வேதம், அற்ப விசுவாசிகள் என்றும் அஞ்ஞானிகள் என்றும் அழைக்கிறது, மத்தேயு6:31,32 வரை வாசித்துப் பார்ப்போமானால் அற்ப விசுவாசிகளே! இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப் புல்லுக்குத் தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா? ஆகையால் என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள். இவைகளை யெல்லாம் அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள்; இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார் என அழகாய் கூறப்பட்டுள்ளது.

சகோதரிகளே, இயேசுவை விசுவாசிக்கிறோம், அவரை ஏற்றுக்கொண்டோம், ஜெபிக்கிறோம், சபை கூடி வருதலை விட்டு விடாதிருக்கிறோம் என்றெல்லாம் கூறிக்கொண்டு உலகக் காரியங்களைக் குறித்து கவலைப்படலாமா? கவலைப்படுவதினால் யார் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்? அப்படி கவலைப்படுவோமானால், நம்மில் தேவ அன்பு இல்லை என்று தான் அர்த்தம்.



கொடுக்கப்படுவதாக நினைத்து ஏமாற்றமடைந்துள்ளனர். அவர்கள் தனிப்பட்ட விதத்தில் எவ்விதமான அற்புதங்கள் செய்யும் வல்லமையை பெற்றிராதபோதிலும் கூட, வாக்குதத்தம் பண்ணப்பட்ட வல்லமையினால் முத்திரைப்போடப் பட்டவர்களாக உபதேசக் கோட்பாட்டினை பிரசங்கம் பண்ண ஆரம்பிக்கின்றனர்.

மேலும் மற்றவர்கள் இயற்கையாகவே நல்ல பேச்சாளர்களாக இருக்கிறபடியினால் பிரசங்கம் பண்ணி எளிதாக சிறந்த வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுகின்றனர். குறிப்பாக அவர்கள் வெளிநாட்டு உதவியை பெற முடிந்தால், தங்கள் உள்ளூர் சகோதரர்கள் இவர்களுக்கு உதவுவதை விட அதிகமாக சம்பாதிக்கையில் அந்த கௌரவத்தைப் பெறக்கூடியவர்களா யிருக்கிறார்கள்....அவர்கள் மேலும் செய்யும் படிக்கு அதிகமான ஊழியத்தைக் கொண்டிரார்கள். இப்படிப்பட்ட ஜனங்கள் அடிக்கடி மாய்மாலம் பண்ணுகிறவர் களாகவும் சோம்பேறியாகவும் இருக்கிறார்கள்.

இவர்கள் யாவரும் பிரசங்கியார்கள் என ஒருவராலும் சொல்லப்படமாட்டார்கள்... இந்த சமயத்தவறுகளில் அவர்கள் இருந்தாலும் ....... அவர்கள் உண்மையற்றவர்கள், பணத்திற்கு பின்னே செல்லுகிறவர்கள், சோம்பேறிகள். வெளிநாட்டு உதவிபெறுகிறவர்கள் எல்லோருமே தங்களுடைய சகோதரரின் நன்மையை எடுத்துக் கொள்ளுகின்றனர் என்று கூறிவிடமுடியாது. கொடுக்கப்பட்டவற்றில் சிலர் குற்ற உணர்வுடையவர்களாயிருக்கின்றனர், ஆனால் அனைவரும் அல்ல.

மீண்டும் முன்னுள்ள காரியங்கள், நீங்கள் ஒரு பிரசங்கியாராயிருந்தால், நீங்கள் ஏன் பிரசங்கித்துக் கொண்டிருக்கிறீர்கள்? என்ற வினாவினை உங்களிடம் எழுப்பியுள்ளது. பிரசங்கியாகயிருப்பதில் ஒரு தவறுமில்லை. இது உலகில் மிகமுக்கியமான பணிகளில் ஒன்று, ஒருவன் இந்த வேலையை நேர்மையுடன் செய்வானானால், இதுவே ஊழியம். துயரம் அல்லது மரணம் போன்றவற்றை சந்தித்தபோதிலும் இது உண்மையை, நேர்மையை, தேவனிடத்திலும் அவருடைய குமாரனிலும் அன்பு செலுத்துவதை, மனிதருடைய ஆத்துமாக்களை நேசிப்பதை, சத்தியத்தைப் பிரசங்கிப்பதை, கர்த்தரிடத்திலும் அவருடைய சபையிலும் விசுவாசத்துடனிருப்பதை எதிர்பார்க்கிறது.

கிறிஸ்து தன்னுடைய நாட்களில், "ஏனெனில், அநேகர் வந்து, என் நாமத்தைத் தரித்துக்கொண்டு: நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள்" (மத்.24:5) என எச்சரித்தார். யோவான், "பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்" (1யோவா.4:1) என்றான். பவுல், ".....சிலர் உங்களைக் கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்க ளேயல்லாமல் வேறல்ல: நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன். முன்சொன்னதுபோல மறுபடியும் சொல்லுகிறேன்; நீங்கள் ஏற்றுக் கொண்ட சுவிசேஷத்தையல்லாமல் வேறொரு

சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனா யிருக்கக் கடவன்'' (கலா.1:7-9) என எச்சரித்தான்.

கிறிஸ்துவினுடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலுக்குப் பின், அவர் அப்போஸ்தலருக்கு, ''......... நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்'' (மாற்.16:16) என கட்டளையிட்டார். பவுல் தீமோத்தேயுக்கு, ''சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி, கடிந்து கொண்டு, புத்திசொல்லு'' (2தீமோ.4:2) என்றான்.

பவுல், நாம் ஒன்றைக்குறித்து பிரசங்கிக்கிறவர்களாய், போதிக்கிறவர் களாயிராமல் அதன்படி செய்கிறவர்களாயிருக்க வேண்டும் என எச்சரித்தான். அவன் ரோம கிறிஸ்தவர்களுக்கு, '' இப்படியிருக்க, மற்றவனுக்குப் போதிக்கிற நீ உனக்குத்தானே போதியாமலிருக்கலாமா? களவு செய்யக் கூடாதென்று பிரசங்கிக்கிற நீ களவு செய்யலாமா? விபசாரம் செய்யக்கூடாதென்று சொல்லுகிற நீ விபசாரம் செய்யலாமா? விக்கிரகங்களை அருவருக்கிற நீ கோவில்களைக் கொள்ளையிடலாமா? (ரோம.2:21,22) என எழுதினான்.

மறுபடியும் பவுல், ''சுவிசேஷத்தை நான் பிரசங்கித்து வந்தும், மேன்மைபாராட்ட எனக்கு இடமில்லை; அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது; சவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ'' (1கொரி.9:16) என்றான். தொடர்ந்து அவன், ''நாங்கள் எங்களையே பிரசங்கியாமல், கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும், எங்களையோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்றும் பிரசங்கிக்கிறோம்'' (2கொரி.4:5) என்று சொன்னான். கொலோசெயருக்கு கிறிஸ்துவைப்பற்றி பேசுகையில் அவன், ''எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து எந்த மனுஷனுக்கும் புத்திசொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறோம்'' (கொலோ.1:28) என்று பிரகடனப்படுத்தினான்.

பிரசங்கத்தின் தேவை, அதனுடைய முக்கியத்துவம், அதனுடைய நோக்கம், அதனுடைய பலன் பற்றி கர்த்தரும் அப்போஸ்தலர்களும் என்ன கூறுகின்றனர் என்பதை அறிந்து கொள்ளுகிறீர்களா? நீங்கள் எப்போர்பட்ட பிரசங்கியார்கள்? நீங்கள் என்ன பிரசங்கித்துக் கொண்டிருக்கிறீர்கள்? நீங்கள் விதைக்கிற விதை உங்களை இரட்சிக்குமா மற்றும் அவற்றிற்கு அவர்கள் பதிலளித்தால், உங்களுக்குச் செவிசாய்க்கிறவர்களை அந்த விதைகள் இரட்சிக்குமா? பிரசங்கிக்கும் பொறுப்பிலிருக்கிற நாம் ஒரு நாளில் தேவனுக்கு முன்பாக நின்று, நாம் என்ன பிரசங்கித்திருக்கிறோம் என்பதற்கு அவருக்குப் பதிலளிக்க வேண்டும் என்பதை நினைவுகூருங்கள். அவர் ஏற்றுக்கொள்வாரா அல்லது நம்மை புறக்கணிப்பாரா? (யோவா.12:48).



பழைய புதிய ஏற்பாடுகள் இரண்டு முழுவதிலும் மாம்சத்துக் குரியதல்லாததாயிருக்கிற பூமிக்குரிய பொருளாயிராத "ஜீவன்கள்" குறித்து நாம் வாசிக்கிறோம். வேதாகமத்தின் 66 புத்தகங்களில் மொத்தம் 34 புத்தகங்களில் தேவதூதர்களை குறித்து குறிப்பிடப்பட்டிருக்கிறது. பல்வேறு பட்ட ஆவிக்குரிய ஜீவன்களை குறித்து 300 தடவைகளுக்கு மேலாக பேசப்பட்டிருக்கிறது.

**நல்ல தூதர்கள் இருக்கிறார்கள்**

"சாதாரணமான" தூதர்கள் பரம "சேனை" என்று அழைக்கப்படுகிறார்கள்; பதினாயிரம் பதினாயிரமாகவும், ஆயிரம் ஆயிரம் தேவதூதர்கள் தேவனை கொண்டிருக்கிறதாக விவரிக்கப்படுகிறார்கள் (வெளி.5:11) இன்றைக்கும் உலகத்திற்கு இரட்சிப்பை சுதந்தரிக்கப்போகிறவர்களின் நிமித்தமாக ஊழியஞ் செய்யும்படி அனுப்பப்படுகிற பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்கள் (எபி.1:14). அவர்கள் வணங்கப்பட வேண்டியவர்கள் அல்ல, ஏனென்றால் (கொலோ.2;19).

தேவதூதர்கள் ஒரு குறிப்பிட்ட வேலையை செய்யும்படி அனுப்பப்படுகிற அநேக உதாரணங்கள் வேதவாக்கியங்களில் இருக்கின்றன. வழக்கமாக அவர்கள் கண்ணுக்கு புலப்படாதவர்களாக இருந்தார்கள்/ இருக்கிறார்கள். அதன் காரணமாகவே அவர்கள் யாருக்கு உதவி செய்து கொண்டிருந்தார்களோ அந்த ஜனங்களாலும் கூட அவர்கள் இருந்தது உணரப்பட முடியவில்லை. ஆனால் அவர்கள் ஜனங்களுக்கு வெளிப்படையாக காணப்பட்ட பொழுது, அவர்கள் மனுஷரூபத்தில் தங்களை வெளிப்படுத்தினார்கள் - வெளிப்படையாக. தேவனிடத்திலிருந்து அனுப்பப்பட்ட ஆவிக்குரியஜீவன்களாக அல்ல. எப்படி இருப்பினும் தேவதூதர்கள் மனுஷர்களுக்கு காணப்பட்ட பொழுது தேவன் தம்முடைய ஆவியினால் ஏவப்பட்ட குறிப்பிலே தேவதூதர்கள் என்று அடையாளப்படுத்தினார். அவற்றில் சில இடங்களில் அவர்கள் ஊழியஞ் செய்யும் சமயங்களில் அல்லது தேவனுடைய செய்தியை அளிக்கும் இடங்களில் தங்களுடைய பரலோக அடையாளத்தை வெளிப்படுத்தினார்கள் (ஆதி.24:7; 28:12; 2இரா.6:14-17;சங்.34:7; லூக்.2:13-14; மத்.4:11; அப்.12:7-9).

**கேரூபீகள்**

கேருபீன்கள், தேவதூதர்களாக இருக்கிற இவர்கள் பின்வரும் வசனங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள் ஆதி.3:24; சங்.80:1,99:1; ஏசா.37:16.

சேராபீன்கள்; தேவதூதர்களாகிய ஜீவன்களுக்கு மற்றொரு பெயரும் கொடுக்கப்பட்டிருக்கிறது (ஏசா.6:2,6).

பிரதான தூதன்: கர்த்தர் தாமே பிரதான தூதனுடைய சத்தத்தோடே இந்த உலகத்தின் முடிவு நெருங்கி வருகிறதை அறிவிக்கிறதற்கு வருவார் என்று 1தெச.4:16 உரைக்கிறது. மோசே மரித்தபோது பிசாசுடனே கூட அவனுடைய சரீரத்தை குறித்து பிரதான தூதன் தர்க்கித்து பேசியதாக யூதா 9ம் வசனம் உரைக்கிறது பெயரிடப்பட்ட தேவதூதர்கள்: இரண்டு தூதர்கள் மாத்திரம் பெயர் குறிப்பிடப்பட்டவர்களாக இருக்கிறார்கள் பிரதான தூதனென்று அழைக்கப்பட்ட மிகாவேல் (தானி.10:13-21; 12:1; யூதா9; வெளி.12:7-9). மற்றும் தானியேல் தீர்க்கதரிசியிடம் அனுப்பப்பட்ட காபிரியேல் (தானி.8:16;9:21) இவனே யோவான் ஸ்நானகன் மற்றும் இயேசுகிறிஸ்து ஆகியோர் கர்ப்பத்தில் தோன்றுவார்கள் என்பதை அறிவித்தவனாக இருக்கிறான் (லூக்.1:19,26).

- தொடரும்

ஆதியாகமம் 3-ம் அதிகாரம் சர்ப்பத்தின் வடிவில் வந்த சோதனைக்காரன் ஏவாளிடத்தில் வந்து (முதல் ஸ்திரீ) அவளிடத்தில் வந்து தேவனுக்கு கீழ்ப்படியாமலிருப்பது அறிவையும் பல நல்ல காரியங்களையும் கொண்டு வரும். தேவன் எச்சரித்த மரணத்தை கொண்டு வராது என்று சொன்னான். ஆகையால் ஏவாளும், பின்பு அவளுடைய புருஷனாகிய ஆதாமும் தேவனுக்கு கீழ்ப்படியாமல் இருப்பதை தெரிந்து கொண்டார்கள். அவர்களுடைய முடிவின் மூலமாக பாவமும் அதை பின் தொடர்ந்து சகல வயதுவந்த மனுஷர்களின் முடிவுகளும் அந்த நாளிலிருந்து மனுஷ சமுதாயத்தை வருத்திக் கொண்டிருக்கிறது.

தேவன் மனுஷருக்குள்ளே பொல்லாப்பை உருவாக்கினாரா? இல்லை தேவன் அவர்களுக்கு தெளிவாக தெரிந்தெடுத்து கொள்ளும் வல்லமையை கொடுத்தார். அவர்களோ கீழ்ப்படியாமையை தெரிந்துகொண்டார்கள்.

**தேவதூதர்கள் யார்?**

நாம் வரலாற்றில் ஒருபடி பின்னோக்கி செல்வோமேயாகில், ஆதாமும் ஏவாளும் பாவம் செய்த சமயத்திலிருந்தே ஏற்கெனவே இருந்ததாக காணப்பட்ட ஆவிக்குரிய ஜீவன்கள் "தேவ தூதர்கள்" (ஆதி.3:24) என்று அழைக்கப்பட்டார்கள். அதை குறித்துதான் ஏதேன் தோட்டத்துக்கு போகும் வழியை ஜீவவிருட்சத்தில் பங்கு கொள்ளாதபடிக்கு அங்கே கேரூபீன்கள் காவலுக்கு வைக்கப்பட்டார்கள். ஆதி.1,2 அதிகாரங்களில் சிருஷ்டிப்பின் சம்பவத்தில் தேவதூதர்கள் பெயரிடப்படாமல் இருக்கிறபடியால், தேவனுடைய வல்லமையினால் அவர்கள் இருந்திருக்க வேண்டும். பூமிக்குரிய காரிய பொருள் எல்லாம் சிருஷ்டிக்கப் படுவதற்கு ஆறு நாட்களுக்கு முன்னே.

தேவதூதர்கள் "தேவர்கள்" ஆக இருக்கிறார்களா? அவர்கள் இயற்கையிலும், தேவனுடைய காரியத்திலும் பங்கு கொள்கிறவர்களாக இருந்திருக்கிறார்களா? அவர்கள் தேவனாக தொழுது கொள்ளப்படக்கூடுமா?

மனுஷர்கள் மற்றும் ஆவிக்குரிய ஜீவன்கள் மத்தியில் காணப்படும் பாவத்தை குறித்த ஒரு சுருக்கமான வரலாறு

தேவன் இருக்கிறார் என்பதை "நிரூபிக்க" வேதாகமம் முன்வராததை போன்று (ஆதி.1;1) ஆதியிலே தேவன்.... என்று தொடங்குகிற விதமாக தேவதூதர்கள், சாத்தானின் தூதர்கள் மற்றும் பொல்லாங்கான தூதர்கள் - அவர்களுடைய இருப்பின் அங்கீகாரமும் கருதப்படுகிறது. இது ஒரு நியாயமான அணுகு முறையாக இல்லையா? மாம்ச கண்களால் ஆவிக்குரிய ஜீவன்களை காணக் கூடாதிருக்கிறபடியால், அவைகள் இருக்கின்றன என்பதை தேவன் அவைகளை குறித்து என்ன சொல்லியிருக்கிறாரோ அதை விசுவாசிப்பதை அடிப்படையாக கொண்டு அவைகளை ஒத்துக்கொள்ளவேண்டும். நாம் தேவனை தேவனென்று விசுவாசிக்க வில்லையானால், வேதாகமத்தை அவருடைய வார்த்தையென்று ஏற்றுக்கொள்ளவில்லையானால், அந்த புத்தகத்தில் அவர் சொல்லக்கூடிய எந்த ஒன்றும் காணப்படாத ஆவிக்குரிய உலகத்தை குறித்து அல்லது பொல்லாப்பை குறித்து நமக்கு எந்த ஒரு தெளிவையும் விளக்கத்தினாலே ஏற்படுத்தாது. நாம் தேவனை விசுவாசிப்போமேயாகில் அந்த ஆவிக்குரிய உலகத்தில் நாம் காணும்படியாக என்னென்ன அறிவின் பலகணிகளையெல்லாம் அவர் திறக்கிறாரோ அப்பொழுது நாம் பாராட்டப்படத்தக்கவர்களாயிருப்போம்.




## வாசகர் கடிதம்

உலக ரட்சகர் இயேசு கிறிஸ்துவின் இனிய திரு நாமத்தில் அன்பின் வணக்கங்கள். தங்கள் தொலைக் காட்சி நிகழ்ச்சியை பார்த்து வருகிறேன். மிகவும் ஆசீர்வாதமாக இருக்கிறது. மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது நன்றி. எனக்காக ஜெபியுங்கள். மாத இதழ் எனக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

S. விவேகானந்தன்,
கும்பகோணம்

பெருமதிப்பிற்குரிய தேவ ஊழியர் போதகர் B.அர்ஜுனன் அவர்களுக்கு எழுதிய அன்பு மடல். இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் தங்களுக்கு வாழ்த்துதல் கூறுகிறேன். அக்டோபர் 2015 The Word of Christ 20ம் பக்கத்தில் தாங்கள் எழுதியுள்ளதை மிகவும் ஜாக்கிரதையாக, நுட்பமாக படித்துப்பார்த்தேன். பேதுரு சபை, பவுல் சபை, யோவான் சபை என்று பெயர் வைத்திருக்கிறார்கள் என்று எழுதியிருக்கிறீர்கள் அது உண்மைதான். இப்படி வைத்து ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுவை தெரிந்தோ அல்லது தெரியாமலோ கனவீனப்படுத்துகிறார்கள்.

C.ஆறுமுகப்பெருமாள், தூத்துக்குடி




### நடப்புச் செய்திகள்

- ஆந்திரா மாநிலத்தின் புதிய தலைநகரம் அமராவதி.
- தஞ்சை மாமன்னன் ராஜராஜசோழனின் 1,030 வது சதய விழா துவக்கம்.
- புல்லட் ரயில் திட்டத்திற்கு ஜப்பான் 1 சதவீதத்திற்கும் குறைவான வட்டியில் ரூ 1லட்சம் கடன் வழங்க உறுதியளித்துள்ளது.
- பாக்கிஸ்தானுக்கு போர் விமானங்கள் வழங்குகிறது அமெரிக்கா.
- நாமக்கல் மாவட்டத்தில் பிளாட்டினம் இருக்கும் பகுதிகளில் இரண்டாம் கட்ட ஆய்வு துவக்கம்.

**- நன்றி தினமலர் நாளிதழ்**

### இவருக்குச் செவி கொடுங்கள்
**(லூக்.9:35- தேவன்)**

- இரட்சிப்பின் விஷயத்தில்
  *- கிறிஸ்து சொல்வதைக் கேட்போம்!*
- கோட்பாட்டின் விஷயத்தில்
  *- கிறிஸ்து சொல்வதைக் கேட்போம்!*
- ஐக்கியத்தின் விஷயத்தில்
  *- கிறிஸ்து சொல்வதைக் கேட்போம்!*
- அதிகாரத்தின் விஷயத்தில்
  *- கிறிஸ்து சொல்வதைக் கேட்போம்!*
- ஆராதனை விஷயத்தில்
  *- கிறிஸ்து சொல்வதைக் கேட்போம்!*
- சபையின் விஷயத்தில்
  *- கிறிஸ்து சொல்வதைக் கேட்போம்!*
- நித்தியத்தின் விஷயத்தில்
  *- கிறிஸ்து சொல்வதைக் கேட்போம்!*

**நானே
வழியும்
சத்தியமும்
ஜீவனுமாயிருக்கிறேன்
(யோவா.14:6-இயேசு)**



## மற்றவர்களை கிறிஸ்துவுக்கு ஆதாயம்பண்ணுகிறவர்களை குறித்த ஒரு வர்ணனை

அவர்களுடைய **காதுகள்** ஒரு இழந்த, மரித்துக்கொண்டிருக்கும் உலகத்திலிருந்து உதவிக்காகக் கதறும் சத்தத்திற்கு திறந்திருக்கின்றன.

அவர்களுடைய **கண்கள்** தேவனுடைய வார்த்தையை தன்னில் விதைக்கும்படி ஏற்றுக்கொள்ளும் இயல்புடைய இதயத்தை எப்போதும் தேடி அலைகின்றன.

அவர்களுடைய **உதடுகள்** தேவனுடைய மகிமையை அறிவிக்கும்படி எப்போதும் ஆயத்தமுடனும், விருப்பத்துடனுமிருக்கின்றன.

அவர்களுடைய கைகள் தங்களுக்காக தேவனுடைய சித்தத்தை கண்டடையும் படி எப்போதும்தேவனுடைய பரிசுத்தவார்த்தையின் பக்கங்களை புரட்டுகின்றன.

அவர்களுடைய **பாதங்கள்** சகல சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க கிறிஸ்துவின் வார்த்தைகளை சுமந்து செல்லும்படிக்கு நகருகின்றன.

அவர்களுடைய **இருதயங்கள்** காலம் கடக்கும் முன்னே இழந்து போனவற்றை சென்றடையும்படி தீவிரத்துடனே நொருங்குண்டு துடிக்கின்றன.

அவர்களுடைய **தலைகள்** ஊழியத்தை மேற்கொள்ளும்படி தங்களுக்கு ஞானம் கிடைக்கும்படி பரலோகத்தின் பிதாவை நோக்கி தலைகவிழ்ந்து ஜெபிக்கின்றன.

அவர்களுடைய **முகங்கள்** அவர்களுக்குள்ளே நம்பிக்கையோடே பிரகாசிக்கின்றன.

அவர்களுடைய **கிரியைகள்** மறைந்திருக்க மாட்டாத மலையிலுள்ள பட்டணத்தை போல **விளக்காயிருக்கிறது.**

அவர்கள் உலகத்தின் **வெளிச்சமாயிருக்கிறார்கள்.** கிறிஸ்துவுக்குள் அவர்கள் வாழ்கிறார்கள், அசைகிறார்கள், தங்களுடைய ஜீவனைப் பெற்றிருக்கிறார்கள்.

*Selected*

*-The Voice of Truth International*

தெரிந்து கொள்வோம்

## வியப்பூட்டும் செய்திகள்

- K.R.K.Ravi Asir
Associate Editor

- உலகப் புகழ் பெற்ற மோனாலீசா ஓவியம் இடது கையால் வரையப்பட்டது.
- எப்போதும் காற்று வீசும் திசையிலேயே தலைவைத்துப் படுக்கும் மிருகம் நாய்.
- தேசியக் கொடியை முதன் முதலில் உருவாக்கிய நாடு டென்மார்க் 1219.
- எறும்புகள் உணவு இல்லாமல் 100 நாட்கள் வாழும்.
- ஒரு பென்சிலைக் கொண்டு 58 கி.மீ. நீளமான கோடு போடலாம்.
- பாம்புகளுக்கு கேட்கும் சக்தி கிடையாது.
- நண்டிற்கு தலை கிடையாது, அதன் பற்கள் வயிற்றில் இருக்கும்.
- வெள்ளை என்பது ஒரு நிறம் இல்லை. அது ஏழு வர்ணங்களின் கலவை.
- முற்றிய பழுத்து காய்ந்த தேங்காய் மரத்திலிருந்து பகலில் விழாது, இரவில் விழும்.
- நமக்கு உடல் முழுவதும் வியர்க்கும். நாய்க்கு நாக்கில் மட்டுமே வியர்க்கும்.


தேவ செய்திகள் அடங்கிய CD & DVD எங்களிடம் உள்ளது ரூ.100/- அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள் உங்கள் முகவரி மற்றும் மொபைல் எண்ணை SMS பண்ணவும். **9443558041**







## தேவனிடத்திற்குச் செல்லும் வழியை மனிதன் கண்டு பிடிக்க முடியுமா?

## Can Man Find the Way to God?

*-Betty*

பெண்கள் பகுதி




### உலகத்தில் தீமை இருக்கிறது தேவன் தீமையை உருவாக்கினாரா?

### There Is Evil in the World. Did God Create Evil?

யாரோ ஒருவர் சொல்கிறார், "இந்த உலகம் முழுவதற்குமாக மேலானவராக தேவன் கீழாக அன்பான மனுஷர்கள் என்று இருந்திருப்பார்களேயாகில், இது என்ன ஒரு அற்புதமான ஸ்தலமாக இருந்திருக்கும்!" ஆனால் இவ்வுலகில் மனுஷர்களைபற்றிய இலட்சிய காட்சி உண்மையை விட்டு தூரமாக இருக்கிறது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். ஒருவகையில் நம்முடைய ஜீவியங்களில் ஆசீர்வாதம் மற்றும் தேவனுடைய அன்பை குறித்த நிரூபணத்தை நம்மை சுற்றிலும் நாம் முழுமையாக காண்கிறோம். ஆனால் சகல இடங்களிலும் நாம் தீமை, கொடுமை, அநியாயம், பாவம் மற்றும் மரணம் இவைகளையே காண்கிறோம்.

அப்படியானால் தீமை எங்கிருந்து வந்தது? தேவன் பாவத்தையும் உருவாக்கினாரா? தேவன் தாமே நல்லவராகவும், கெட்டவராகவும், இவ்வாறே இருவிதமாக ஒளியாகவும், இருளாகவும், சிருஷ்டிகராகவும், அழிக்கிறவராகவும் இருக்கிறாரா? சில மார்க்கங்கள் இவ்விதமாக போதிக்கின்றன சில ஜனங்களும் இவ்விதமாக நம்புகிறார்கள். தீமையை குறித்த அநேக புராண விளக்கங்கள் இருக்கின்றன அஞ்ஞான மார்க்கங்களில் ஒரு தேவதைகள் கூட்டம் இருந்தது /இருக்கிறது அந்த தேவர்கள் மனுஷர்களிலிருந்து மிகவும் குறைவான வித்தியாசம் கொண்டவர்களாகவும், நம்முடைய பலவீனங்கள், பொறாமைகள், போட்டிகள் இன்னும் காட்டிக்கொடுத்தல் இப்படிப்பட்டவர்களாக சித்திரிக்கப்பட்டார்கள். பல தெய்வ வழிபாட்டு மார்க்கங்களின் தேவர்கள் தீயகாரியங்களை செய்கிறவர் களாகவும், இன்னும் தண்டிக்கப்படுகிறவர்களாகவும் கூட எண்ணப்பட்டார்கள்/ எண்ணப்படுகிறார்கள்.

"தேவன்" குறித்த இந்த கருத்துக்கள் சிருஷ்டிப்பின் மூலமாகவும், வேதவாக்கியங்கள் மூலமாகவும் நாம் அறிந்திருக்கிற தேவனுடைய மகத்துவம் மற்றும் பூரணத்துவம் இவற்றிலும் முரண்பட்டவைகளாக இருக்கின்றன. இன்னும் தேவன் இருக்கின்ற சகலத்துக்கும் சிருஷ்டிகராக இருப்பாரேயாகில், அவர் தீமையை உருவாக்க வில்லையென்றால், தீமை இருப்பது எவ்வாறு விளக்கப்பட முடியும்?

தேவன் மனுஷரை நல்லவர்களாக இருக்கும்படி சிருஷ்டித்தார். சிருஷ்டிப்பின் நேரத்தில் மனுஷனை குறித்த தேவனுடைய விளக்கம் "நல்லது" என்றவிதமாக இருந்தது (ஆதி.1;31). அவர் பூரணராக இருந்தார், அவரிடத்தில் தீமை இல்லாதிருந்தது ஆனால் நித்தியமான ஆத்துமாவுக்குள்ளாக தம்முடைய காற்றை ஊதினார் தேவனிடத்தில் அன்புகூர்ந்து அவருக்கு கீழ்ப்படிவதை அல்லது கீழ்ப்படியாமல் இருப்பதை தெரிந்துகொள்ளும் வல்லமையையும் தேவன் மனுஷனுக்கு அளித்தார் (ஆதி.2;16,17).